(6) The Board has recommended a dividend of Rs.10/- (100%) per Equity Share of Rs.10/- each for the financial year ended 31st March, 2024.

(7) The figures for the Quarter ended 31st March, 2024 and 31st March, 2023 are the balancing figures between the Audited Figures in respect of the full financial year and the published year to date figures upto the end of the Third Quarter of the relevant financial year which were subjected to Limited Review.

(8) The previous period's / year's figures have been regrouped and reclassified, wherever necessary to conform to the current period's / year's presentation.

**Place : Chennai**
**Date : May 24, 2024**

**For TTK HEALTHCARE LIMITED**
**T T RAGHUNATHAN**
**EXECUTIVE CHAIRMAN**

---

AVAADA

## Avaada Energy Secures 1050 MWp Solar Project in NTPC Auction; Crosses over 15 GWp Portfolio in India

**~ Strengthens leadership in renewable energy with a competitive tariff of INR 2.69 per kWh**

**Avaada Energy, a leading player in the renewable energy sector and an arm of Avaada Group, is pleased to announce that it has achieved a historic milestone by winning the single largest bid of 1050 MWp capacity of solar project in a recent tender issued by the Renewable Energy Implementing Agency (REIA) National Thermal Power Corporation (NTPC). This achievement underlines Avaada's expertise and commitment to contributing to India's renewable energy targets.**

**The company has secured a significant 1050 MWp capacity of solar project at a competitive tariff of INR 2.69 per kWh, which is expected to be completed within 24 months of signing the 25-year Power Purchase Agreement (PPA), showcasing Avaada Energy's commitment to delivering large-scale renewable energy projects efficiently and effectively.**

**In addition to this landmark win, Avaada Energy has reached a remarkable milestone by achieving Letters of Award and PPAs for over 15 GWp in India. This extensive portfolio underscores the company's dedication to advancing the renewable energy landscape across the nation.**

**Commenting on this significant development, Mr. Vineet Mittal, Chairman of Avaada Group, said, "We are incredibly proud to have won the single largest bid of 1050 MWp from NTPC. This achievement not only highlights our capability to execute large-scale renewable energy projects but also reinforces our commitment to supporting India's transition to a sustainable energy future. Crossing over 15 GWp portfolio is a testament to our team's hard work, innovative approach, and dedication to excellence.**

**My confidence in taking bigger bets increased after successfully completing the 1250 MWp project at a single location in Rajasthan in 2022, which until 2023 was the single largest project developed by an IPP in the world. As Avaada, we also ventured into Agri Voltaic Solar solutions in the state of Maharashtra, further diversifying our portfolio and contributing to sustainable agricultural practices. We remain committed to driving the growth of renewable energy in India and contributing to a greener planet."**

**Upon commissioning, the solar project is expected to generate approximately 1800 million units of renewable energy annually, significantly contributing to India's green energy supply and powering more than 12,00,000 households.**

**This initiative is projected to play a significant role in reducing carbon emissions, with an expected annual CO2 reduction of approximately 16,81,200 tonnes, aligning with India's climate objectives. This project will add substantial value to Avaada's growing footprint in the renewable energy landscape.**

### About Avaada Group

**Generation, Solar PV Manufacturing, development of Green Fuels including Green Ammonia, Green Methanol and Sustainable Aviation Fuel, and providing Energy Storage Solutions. Under Mr. Vineet Mittal's leadership, the group has become a significant global energy player. Avaada Energy, its renewable power generation arm, aims to achieve 11 GWp capacity by 2026. Avaada's strong execution capabilities and proven track record have attracted significant international investments, including a fund commitment of US $1.3 billion in 2023, with a US $1 billion commitment from Brookfield's Energy Transition Fund, and $300 million from GPSC, PTT Group of Thailand.**

**For further information, please contact:**

**Avaada Group**
**Corporate Communications**
**8850960705**
**corporatecommunications@avaada.com**
**Website: www.avaada.com**
**Twitter: @avaadagroup**
**Facebook: @AvaadaGroup**
**LinkedIn: @AvaadaGroup**

**PR Contact:**
**Storytellers 101**
**Pashmi Shah**
**9850125666**
**pashmi.storytellers101pr@gmail.com**

## சென்னை பெட்ரோலியம் சார்பில்

# ‘சிப்பெட்’ நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணை: நிர்வாக இயக்குனர் அரவிந்த் குமார் வழங்கினார்

சென்னை, மே 25–

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (CPCL), சமூகநல நடவடிக்கையின் ஒரு பகுதியாக தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான "மெஷின் ஆபரேட்டர் – பிளாஸ்டிக் செயலாக்கத்தில்" வேலை வாய்ப்பு தரும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க (சிப்பெட்) மத்திய பெட்ரோ கெமிக்கல்ஸ் என்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள ‘சிப்பெட்’ வளாகத்தில் 6 மாதங்கள் முழு நேர பயிற்சி வழங்க சென்னை பெட்ரோலியம் 40 மாணவர்களைக் கொண்ட குழுவிற்கு ஆதரவளித்தது. இப்பயிற்சி நவம்பர் மாதத்தில் தொடங்கி, 40 மாணவர்களும் பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்தனர்.



சென்னை பெட்ரோலியம் நிர்வாக இயக்குநர் அரவிந்த் குமார், சிப்பெட்டில் பயிற்சி பெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழாவில் சான்றிதழ்கள் மற்றும் வேலை வாய்ப்பு ஆணைகளை வழங்கினார். சிப்பெட் தலைமை இயக்குநர் ஷிஷிர் சின்ஹா மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்த மாணவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு உற்பத்தி நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்றனர். இதற்கான பாராட்டு விழாவில், சென்னை பெட்ரோலியம் நிர்வாக இயக்குநர் அரவிந்த் குமார், மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வேலை வாய்ப்பு ஆணைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், இன்றைய வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார சந்தையில் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். வேலைவாய்ப்பை மேம்படுத்துவதிலும் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலிலும் அதன் பங்கை வலியுறுத்தினார். மாணவர்களின் கடின உழைப்பு மற்றும் ‘சிப்பெட்’ வழங்கும் தரமான பயிற்சியை வலியுறுத்தி, மதுரை மற்றும் நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் இந்த முயற்சியைப் பிரதிபலிக்கும் சென்னை பெட்ரோலியம் திட்டங்களை அவர் அறிவித்தார்.



சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவரும் தமிழ்நாடு பனை மரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவருமான எர்ணாவூர் நாராயணன் தன் சகோதரர் ராதாகிருஷ்ணனின் 39ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில் அவரது உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அதனை தொடர்ந்து நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் பயனாளிகளுக்கு கண் கண்ணாடியை இளைஞர் அணி செயலாளர் கார்த்திக் நாராயணன் வழங்கினார். தமிழகத்தில் 10ஆம் வகுப்பு தேர்வில் 3ஆம் இடம் பிடித்த சுவேதா பொற்செல்வி, தஸ்தகீர் ஆகியோருக்கு கல்வி உதவித் தொகை வழங்கினார்.

# ஐ.ஏ.எஸ் தேர்வில் வென்ற ஆர்வம் அகாடமி மாணவி ஓவியாவுக்கு நிறுவனர் சிபிகுமரன் மனம் திறந்த பாராட்டு

## புதிய மாணவர்கள் வெற்றி பெற டிப்ஸ்



சென்னை, மே 25–

ஆர்வம் ஐ.ஏ.எஸ் அகாடமியில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.ஆர்.எஸ் பணிகள் உள்ளடங்கிய இந்திய குடிமைப் பணிகள் தேர்வுக்கான வழிகாட்டும் முகாம் நடைபெற்றது. இந்த ஆண்டு குடிமைப் பணித் தேர்வில் சாதனை வெற்றி பெற்ற மாணவி க. ஓவியா கலந்து கொண்டு புதிய தேர்வர்களுக்கு வழிகாட்டிப் பேசினார்.

அவர் பேசுகையில், ‘‘இந்திய குடிமைப் பணித் தேர்வு உலகம் முழுதும் நடைபெறுகின்ற போட்டித் தேர்வுகளில் 2வது உயர்ந்த பட்ச கடினமான தேர்வு ஆகும். ஆனாலும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1000த்திற்கும் மேற்பட்ட தேர்வர்கள் இறுதி வெற்றி பெற்று இந்திய அரசின் உச்சபட்ச அரசுப் பணியாகிய குடிமைப் பணியினைப் பெறுகின்றார்கள். எனவே முறையாகவும், தெளிவாகவும் திட்டமிட்டுப் படித்தால் நீங்களும் மிகச்சிறந்த வெற்றியாளராகலாம். ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். போன்ற உயர்ந்த பதவிகளில் அமர்ந்து உங்களின் சமூக நிலையை உயர்த்திக் கொள்வதோடு ஏழை எளிய மக்களுக்கும் சேவை செய்ய முடியும் என்றார்.

எனது பெற்றோர்கள் என்னை நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள். புற அழுத்தங்கள் என் மீது விழுந்து விடாமல், எனது முயற்சியை நான் தொடர்ந்து மேற்கொள்ள பாதை அமைத்துக் கொடுத்தார்கள். அவர்கள் தந்த ஊக்கத்தால் நான் வென்றேன். அதனால் பெற்றோர்கள் தொடர்ந்து உங்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் உண்மையோடு நீங்கள் இருக்க வேண்டும்.

குடிமைப் பணித்தேர்வில் நீங்கள் வெற்றி பெறவேண்டும் என்று விரும்பினால் நாளிதழ்களைப் படிக்கும் வழக்கம் கட்டாயக் கடமைகளுள் ஒன்றாக வைத்துக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார்.

விருப்பப்பாடம் வரலாறு

இந்நிறுவனத்தைப் பொறுத்த அளவில் தமிழ் மற்றும் வரலாறு விருப்பப் பாடத்தில் தமிழ்நாட்டின் சிறந்த நிறுவனமாக விளங்குகின்றது. எனது விருப்பப் பாடமும் வரலாறு தான் என்னைப் போல பல வெற்றியாளர்கள் உருவாகுவதற்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்பவர் நிறுவனர் மு.சிபிகுமரன்.

புதிய தேர்வர்களுக்கும், எளிய பின்புலத்தில் இருந்து வருகின்ற தேர்வர்களுக்கும் பொருளாதாரத் தேவைகளை அறிந்து உதவி செய்வதோடு வெற்றிக்கான வழிகாட்டுதலையும், ஊக்கத்தையும் தொடர்ந்து கொடுப்பவர் மு. சிபிகுமரன். அவரது “நாளை நான் ஐ.ஏ.எஸ்”. என்ற நூல் மற்ற நூல்களைப்போல இல்லாமல் போட்டித் தேர்வு எழுதும் தேர்வர்களுக்கு நடைமுறை சாத்தியங்களையும், போராட்ட வெற்றிகளையும் எடுத்துரைத்து நம்பிக்கை தருகின்ற நூல் ஆகும். அவரது வழிகாட்டுதல் நிச்சயமாக உங்களை வெற்றியாளராக மாற்றும்.

உங்களது வெற்றிக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்’’ என்றும் கூறினார்.

நிகழ்ச்சியில் மு. சிபிகுமரன் எழுதிய “நாளை நான் ஐ.ஏ.எஸ்” என்ற நூல் அனைத்துத் தேர்வர்களுக்கும் வழங்கப்பட்டது. 100க்கும் மேற்பட்ட தேர்வர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்ச்சியை அகாடமியின் மூத்த பயிற்றுநர்கள் இ. சத்யா, டி. துரை அகாடமியின் அலுவல் மேற்பார்வையாளர்கள் ராஜ்குமார், சாந்தக்குமார், கொ.கவிதா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.


# RADIANT CASH MANAGEMENT SERVICES LIMITED

(Formerly Radiant Cash Management Services Private Limited)

CIN: L74999TN2005PLC055748

பதிவு அலுவலகம் : 28, விஜயராகவா ரோடு, தி.நகர், சென்னை- 600 017, தமிழ்நாடு.

தொலைபேசி : 91- 44 – 4904 4904. மின்னஞ்சல் : investorrelations@radiantcashlogistics.com இணையதளம் : www.radiantcashservices.com

## 31 மார்ச் 2024-ல் நிறைவுற்ற காலாண்டு மற்றும் ஆண்டு முடிவிற்கான தணிக்கை செய்யப்பட்ட தனித்துள்ள மற்றும் தொகுக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை

(ரூ. மில்லியன்களில், இல்லையெனில் தெரிவிக்கப்பட்டால் தவிர)

| வ. எண். | விவரங்கள் | தனித்துள்ள | | | | | தொகுக்கப்பட்ட | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காலாண்டு முடிய | | | ஆண்டு முடிய | | காலாண்டு முடிய | | ஆண்டு முடிய |
| | | 31.03.2024 (தணிக்கையானது) | 31.12.2023 (தணிக்கையாகாதது) | 31.03.2023 (தணிக்கையானது) | 31.03.2024 (தணிக்கையானது) | 31.03.2023 (தணிக்கையானது) | 31.03.2024 (தணிக்கையானது) | 31.12.2023 (தணிக்கையாகாதது) | 31.03.2024 (தணிக்கையானது) |
| 1 | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | 984.54 | 1,012.97 | 913.72 | 3,902.67 | 3,574.82 | 1,000.31 | 1,015.17 | 3,920.64 |
| 2 | நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் (வரி, விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண இனங்களுக்கு முன்#) | 125.31 | 161.89 | 206.50 | 617.67 | 843.12 | 116.69 | 159.11 | 606.27 |
| 3 | நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு முன் (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண இனங்களுக்கு பின்#) | 125.31 | 161.89 | 206.50 | 617.67 | 843.12 | 116.69 | 159.11 | 606.27 |
| 4 | நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு பின் (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண இனங்களுக்கு பின்#) | 89.90 | 120.25 | 155.40 | 454.41 | 627.27 | 82.86 | 117.47 | 444.59 |
| 5 | மொத்த விரிவான வருமானம் இக்காலகட்டத்தில் [இக்காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப்பின்) உள்ளடக்கியது] | 86.20 | 120.39 | 153.89 | 451.16 | 623.81 | 78.82 | 117.61 | 441.00 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ரூ.1 ஒன்றுக்கு) | 106.71 | 106.71 | 106.71 | 106.71 | 106.71 | 106.71 | 106.71 | 106.71 |
| 7 | கையிருப்புகள் (மறுமதிப்பீடு கையிருப்பு தவிர) | - | - | - | 2,430.37 | 2,192.63 | - | - | 2,423.26 |
| 8 | பங்கொன்றுக்கு ஈட்டிய தொகை (முகமதிப்பு தலா ரூ.1/-) அடிப்படை மற்றும் குறைமதிப்பீடு (காலாண்டுக்கு வருடாந்தரபடுத்தப்படாதது) | 0.84 | 1.13 | 1.51 | 4.26 | 6.11 | 0.78 | 1.10 | 4.17 |

**தனித்துள்ள குறிப்புகள் :**

1. SEBI-ன் (பட்டியலிடல் மற்றும் பிற வெளிப்படுத்தல் தேவைகள்) விதிகள் 2015-ன்படி விதி 33-ன் கீழ் பங்குச்சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, நிறுவனத்தின் மார்ச் 31, 2024 முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டு முடிவிற்கான தணிக்கை செய்யப்பட்ட தனித்துள்ள மற்றும் தொகுக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை விவரங்களின் சாரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் மார்ச் 31, 2024 முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டு முடிவிற்கான தணிக்கை செய்யப்பட்ட தனித்துள்ள மற்றும் தொகுக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் முழு வடிவம் பங்குச்சந்தையின் இணையதளங்களான (**https://www.bseindia.com** மற்றும் **https://www.nseindia.com**) மற்றும் நிறுவனத்தின் இணையதளமான (**www.radiantcashservices.com**)-ல் கிடைக்கப்பெறும்.
2. 31 மார்ச், 2024-ல் காலாண்டு மற்றும்ஆண்டு முடிவிற்கான மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகள் முறையே மே 22 மற்றும் 23, 2024 அன்று நடைபெற்ற தணிக்கை குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட முடிவுகள் குறித்து மாற்றப்படாத அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.
3. கம்பெனிகள் சட்டம் 2013-ன் பிரிவு 133-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலை ("Ind AS" என குறிப்பிடப்படுகிறது) மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற கணக்கியல் கொள்கைகள் மற்றும் திருத்தப்பட்ட இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் விதிமுறைகள் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் (SEBI விதிமுறைகள்) விதி அல்லது ஒழுங்குமுறை 33 ஆகியவற்றின் கீழ் முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
4. முந்தைய ஆண்டில், நிறுவனம் ஆரம்ப பொது வெளியீட்டில் (IPO) ஒவ்வொன்றும் ரூ.1 முக மதிப்புள்ள 26,676,977 சம பங்குகளை வெளியிட்டு நிறைவு செய்துள்ளது. இந்த IPO நிறுவனம் புதிதாக வெளியிட்ட 5,454,546 சமபங்குகள் மற்றும் பிராஸ்பெக்டஸில் விரிவாக வழங்கப்பட்டுள்ளபடி பங்குதாரர்களால் விற்பனை செய்யப்பட்ட 21,222,431 சம பங்குகளை விற்பனை செய்வதற்கான சலுகையைக் கொண்டுள்ளது. நிறுவனத்தில் புதிய வெளியீடு ஒரு சம பங்கிற்கு ரூ.99 சந்தா வீதம் (ஒரு சம பங்கிற்கு ரூ.98 பத்திர பிரீமியம் உட்பட) ரூ.540.00 மில்லியனையும் (ஜனவரி 2, 2023 அன்று பங்குகள் ஒதுக்கப்பட்டன) மற்றும் ஆபர் விற்பனையில் ஒவ்வொன்றும் ரூ.1 முக மதிப்புள்ள 21,222,431 சம பங்குகளை விற்பனை செய்து ரூ.2,026.41 மில்லியனையும் திரட்டி உள்ளது.
   வெளியீட்டு நோக்கங்களின்படி கிடைத்த தொகை மற்றும் அதன் பயன்பாடு கீழ்கண்டபடி கொடுக்கப்பட்டுள்ளது :

(ரூ. மில்லியன்களில், இல்லையெனில் தெரிவிக்கப்பட்டால் தவிர)

| விவரங்கள்/பொருட்கள் | மொத்த தொகை | மாற்றியமைக்கப்பட்ட ஒதுக்கீடு** | நிதியாண்டு 2022-23-ல் பயன்படுத்தப்பட்ட தொகை | நிதியாண்டு 2023-24-ல் பயன்படுத்தப்பட்ட தொகை | நிதியாண்டு 2023-24 வரை பயன்படுத்தப்பட்ட மொத்த தொகை | நிதியாண்டு 2024-25-ல் பயன்படுத்தப்பட உள்ள தொகை |
|---|---|---|---|---|---|---|
| பணி மூலதிற்கான நிதி தேவைகள் | 200.00 | 200.00 | 100.00 | 100.00 | 200.00 | - |
| பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு கவச வேன்களை வாங்குவதற்காக மூலதன செலவுத்தேவைகளுக்கான நிதி தேவைகள் | 254.80 | 235.33 | 28.39 | 206.94 | 235.33 | - |
| பொது நிறுவன நோக்கங்கள் | 37.72 | 58.29 | - | 34.02 | 34.02 | 24.27 |
| **மொத்த நிகர தொகை** | **492.52*** | **493.62** | **128.39** | **340.96** | **469.35** | **24.27** |

* GST-யின் நிகரம்

** மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த காலாண்டில், நிறுவனமானது 220 எண்ணிக்கையிலான சிறப்பாக தயாரிக்கப்பட்ட கவச வேன்களை ரூ.235.33 மில்லியன் (விற்பனையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை உட்பட) மதிப்பிற்கு வாங்கியுள்ளது, இதன் விளைவாக ரூ.19.47 மில்லியன் சேமித்துள்ளது. மேலும், நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, ரூ.1.10 மில்லியன் (IPO செவினங்களில் நிறுவனத்தின் பங்கு) சேமிப்பில் உள்ளது. இதனால் சேமித்த ரூ.20.57 மில்லியன் சேமிப்பு தொகையை நிறுவனமானது ஒதுக்கீடு செய்துள்ளது.

5. தலைமை செயல்பாட்டு தீர்மான நிபுணரால் முடிவுகள் மதிப்பாய்வு செய்யப்படுவதன் அடிப்படையில், "பண லாஜிஸ்டிக்ஸ் சேவை" ஒரு அறிக்கையிடக்கூடிய பிரிவாக நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. எனவே, அறிக்கையிடக்கூடிய வேறு பிரிவுகள் எதுவும் இல்லை.
6. மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த காலாண்டின் இலக்கங்கள், மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும் மற்றும் டிசம்பர் 31, 2023 வரை முடிவடைந்த காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத வெளியிடப்பட்ட வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன் செய்யப்பட்ட இலக்கங்களாகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
   மார்ச் 31, 2023-ல் முடிவடைந்த காலாண்டு இலக்கங்கள், மார்ச் 31, 2023-ல் முடிவடைந்த நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும் மற்றும் டிசம்பர் 31, 2022 வரை முடிவடைந்த காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளுக்கும் இடையே சமநிலை உருவமாக நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளன. இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
7. நிறுவனத்தின் இயக்குனர் குழு இன்று நடைபெற்ற கூட்டத்தில் தலா ரூ.1/- கொண்ட சமபங்குகளுக்கு இறுதி ஈவுத் தொகையாக ரூ.2.50/- (250%) என ரூ.266.77 மில்லியன்கள் 2023-24 நிதியாண்டிற்கான தொகையாக பரிந்துரைத்துள்ளது.

**தொகுக்கப்பட்ட குறிப்புகள் :**

1. 31 மார்ச், 2024-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டு முடிவிற்கான தணிக்கை செய்யப்பட்ட தொகுக்கப்பட்ட நிதி முடிவுகள் முறையே மே 22 மற்றும் 23, 2024 தேதிகளில் நடைபெற்ற தணிக்கை குழு/இயக்குனர்கள் குழு கூட்டத்தில் தணிக்கை குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட முடிவுகள் குறித்து மாற்றப்படாத அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.
2. கம்பெனிகள் சட்டம் 2013-ன் பிரிவு 133-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலை ("Ind AS" என குறிப்பிடப்படுகிறது) மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற கணக்கியல் கொள்கைகள் மற்றும் திருத்தப்பட்ட இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் விதிமுறைகள் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் (SEBI விதிமுறைகள்) விதி மற்றும் ஒழுங்குமுறை 33 ஆகியவற்றின் கீழ் இந்த தொகுக்கப்பட்ட முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
3. நிறுவனம் 01 டிசம்பர், 2023 அன்று ஓர் துணை நிறுவனத்தை வாங்கியதும் அதனால் இது துணை நிறுவனத்தின் நிதி முடிவுகளையும் மற்றும் அந்த தேதியிலிருந்து ஸ்டெப்-டவுன் துணை நிறுவனத்தையும் உள்ளடக்கியது. இதனால் முந்தைய ஆண்டு புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படவில்லை.
4. மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த காலாண்டின் இலக்கங்கள், மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும் மற்றும் டிசம்பர் 31, 2023ல் முடிவடைந்த காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத வெளியிடப்பட்ட தேதி வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன் செய்யப்பட்ட இலக்கங்களாகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
5. தலைமை செயல்பாட்டு தீர்மான நிபுணரால் முடிவுகள் மதிப்பாய்வு செய்யப்படுவதன் அடிப்படையில், "பண லாஜிஸ்டிக்ஸ் சேவை" ஒரு அறிக்கையிடக்கூடிய பிரிவாக குழு அடையாளம் கண்டுள்ளது. எனவே, அறிக்கையிடக்கூடிய வேறு பிரிவுகள் எதுவும் இல்லை.

RADIANT CASH MANAGEMENT SERVICES LTD-க்காக

Col. டேவிட் தேவசகாயம்

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

DIN: 02154891

இடம் : சென்னை

தேதி : 23.05.2024


## பெயர் மாற்றம்

BHARATH KUAMR, தந்தை பெயர்: Tikmaram Premaji Prajapati, பிறந்த தேதி: 13.09.1994, நெ.7/22, பிள்ளையார் கோயில் தெரு, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன், சென்னை– 600 003. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BHARATH PRAJAPATI** என்று அழைக்கப்படுகிறேன்.

BHARATH KUAMR

**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE AT PONNERI**
**EP. NO. 17 OF 2019**
**IN**
**ARB. NO. 40 OF 2018**

Equitas small finance bank Ltd., ..... Petitioner/DH

VS

Amavasai and another ..... Respondents/JDs

To
1.Amavasai, S/W/o Pakkiri
2.Balamani, S/w/o.Amavasai
Both are residing at.
No. 39, Gangaiamman koil st,
Reddypalayam, Ponneri,
Tamil Nadu - 601204.
.... Respondents/JDs

Take Notice that the above Execution Petition filed the EP for attachment of immovable property as against JD 1 to 2before Principal Sub Judge at ponneri. You are directed to appear before the court to make your objection on 05.06.2024 at 10.30am either in person or through an Advocate, if you fail to appear the suit will be decided accordingly.

A. Damodaran
T. Senthamil selvi
Counsel for petitioner /DH

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர். தாம்பரம்.**

**ந.க.எண்.650/இ/2024**

திரு. ஜெயபால் த/பெ.காசிப்பழம் ...மனுதாரர்

மனுதாரர் தன் தாய் கிருஷ்ணமாரியம்மாள், எண். 4/21, மேட்டு தெரு, பெரும்பாக்கம், சென்றனை–600 100 என்ற விலாசத்தில் கடந்த 21.11.2018 என்ற தேதியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறியதால் தற்போது மேற்படி இறப்பினை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் தங்கள் ஆட்சேபணையை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

**ஜெயபால்,**
**மனுதாரர்**

## பொது அறிவிப்பு

(அசல் நிலம் /சொத்து ஆவணம் காணவில்லை)

சென்னை -600099, கொளத்தூர், செந்தில் நகர், முதல் பிரதான சாலை, எண்.8-ல் வசிக்கும் K.தனலட்சுமி, க/பெ.R.கிருஷ்ணமூர்த்தி ஆகிய நான் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பம்மது குளம் கிராமம் சர்வே எண்.601/1B38 மற்றும் 601/1B39-ல் அடங்கிய 2400 சதுர அடிகள் கொண்ட காலி மனையினை கிரையம் பெற்று அதனை ரெட்ஹில்ஸ் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 27.08.2015-ந் தேதி ஆவண எண்.8330/2015 ஆக பதிவு செய்து அன்றே அதன் தாய் பத்திரம் மற்றும் மூல பத்திரமான கௌரி என்பவர் பெயரில் அதே SRO-ல் கடந்த 04.07.1996-ம் தேதி பதிவான ஆவண எண்.3079/1996 என்ற பத்திரத்தையும் பெற்று எனது பொறுப்பில் வைத்திருந்தேன். அந்த சொத்தினை எனது சந்ததியாருக்கு எழுதி கொடுக்க முடிவு செய்து கடந்த 07.04.2024-ம் தேதியன்று மேற்கண்ட எனது வீட்டிலிருந்து அம்பேத்கார் நகரிலுள்ள பத்திர எழுத்தரை பார்க்க காலை 11.00 மணியளவில் சென்றேன் அவர் கேட்டு கொண்டதின் பேரில் அவரது வீட்டின் அருகிலுள்ள ஜெராக்ஸ் கடையில் நான் வைத்திருந்த ஆவணங்களை நகல் எடுத்துவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்த போது தாய் பத்திரமான ஆவண எண்.3079/1996- என்ற பத்திரம் மட்டும் காணவில்லை. எனவே மேற்கண்ட பத்திரத்தை யாரேனும் கண்டு எடுத்திருந்தால் மேற்கண்ட விலாசத்தில் அனுகி கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
K.தனலட்சுமி
க/பெ. R.கிருஷ்ணமூர்த்தி,
எண்.8. செந்தில் நகர்,
1-வது பிரதான சாலை.
கொளத்தூர் சென்னை-600 099
செல் 8939489238


# அருணா ஹோட்டேல்ஸ் லிமிடெட்

நிறுவன அடையாள எண்: (CIN): L15421TN1960PLC004255

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 145, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600034,

தொலைபேசி: 044-4588 4580 மின்னஞ்சல்: cs@ahlchennai.com, இணையதளம்: www.arunahotels.com

## 31.03.2024 முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தனித்தனியாக தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளின் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

| வரிசை எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2024 தணிக்கை செய்தது | முடிந்த காலாண்டு 31.03.2023 தணிக்கை செய்தது | முடிந்த காலாண்டு 31.12.2023 தணிக்கை செய்யாதது | முடிவடைந்த ஆண்டு 31.03.2024 தணிக்கை செய்தது | முடிவடைந்த ஆண்டு 31.03.2023 தணிக்கை செய்தது |
|---|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகளின் மொத்த வருமானம் | 620.57 | 157.88 | 387.32 | 1,731.94 | 196.46 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / (இழப்பு) (வரி, விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண பொருட்கள் முன்) | (76.24) | (598.55) | (110.21) | (373.81) | (1,166.90) |
| 3 | வரிக்கு முந்தைய காலத்திற்கு நிகர லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண பொருட்களுக்குப் பிறகு) | (76.24) | (598.55) | (110.21) | (373.81) | (1,166.90) |
| 4 | வரிக்குப் பிந்தைய காலத்திற்கான நிகர லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண பொருட்களுக்குப் பிறகு) | (51.15) | (298.53) | (158.27) | (449.81) | (892.34) |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான இலாபம் / (இழப்பு) (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பிறகு)] | (47.34) | 2,075.07 | (158.27) | (445.99) | 1,481.26 |
| 6 | சமபங்கு பங்கு மூலதனம் | 3,390.00 | 3,390.00 | 3,390.00 | 3,390.00 | 3,390.00 |
| 7 | இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு இருப்புக்களைத் தவிர) / பிற பங்கு | (9,172.75) | (8,726.11) | (9,124.76) | (9,172.75) | (8,726.11) |
| 8 | ஒரு பங்கிற்கு சம்பாதிப்பது (தலா ரூ.10/-) (தொடர்ச்சியான மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) *பங்கு ஒன்றுக்கு ஆண்டு வருமானம் இல்லை | | | | | |
| | a) அடிப்படை | (0.15) | (0.88) | (0.47) | (1.33) | (2.63) |
| | b) நீர்த்த | (0.15) | (0.88) | (0.47) | (1.33) | (2.63) |

**குறிப்புகள்:** மேலே உள்ளவை, மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதி முடிவுகளின் விரிவான வடிவமைப்பின் ஒரு பகுதி ஆகும், செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ஒழுங்குமுறை 33 இன் கீழ் பங்குச் சந்தைகளுடன் தாக்கல் செய்யப்பட்டது. 31.03.2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தையின் இணையதளம்: www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில்: www.arunahotels.com கிடைக்கும்.

அருணா ஹோட்டல்ஸ் லிமிடெட்டாக
ராதாஸ்வாமி வெங்கடேஸ்வரன்
நிர்வாக இயக்குனர்
இயக்குனர் அடையாள எண் (DIN): 09532159

இடம்: சென்னை
நாள்: 24.05.2024



# டி.டி.கே. ஹெல்த்கேர் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 6, கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086

CIN: L24231TN1958PLC003647 | Website: www.ttkhealthcare.com

## மார்ச் 31, 2024 வரை முடிந்த நான்காம் காலாண்டு மற்றும் வருடத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|
| | | (31/03/2024) தணிக்கையானது | (31/12/2023) தணிக்கையாகாதது | (31/03/2023) தணிக்கையானது | (31/03/2024) தணிக்கையானது | (31/03/2023) தணிக்கையானது |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 18,105.63 | 18,384.72 | 18,013.74 | 75,279.38 | 73,618.23 |
| 2. | நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விதிவிலக்கான மற்றும்/ அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்பு) | 2,422.63 | 1,769.97 | 2,675.56 | 8,412.03 | 83,807.48 |
| 3. | நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு முன் (விதிவிலக்கான மற்றும்/ அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்பு) | 2,422.63 | 1,769.97 | 2,675.56 | 8,412.03 | 83,807.48 |
| 4. | நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு பின் (விதிவிலக்கான மற்றும்/ அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்பு) | 1,827.20 | 1,289.44 | 1,694.27 | 6,284.19 | 63,971.29 |
| 5. | மொத்த விரிவான வருமானம் (லாபம் / (நஷ்டம்) வரிக்கு பின்) மற்றும் மற்ற விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 1,627.14 | 1,228.91 | 1,550.47 | 6,166.51 | 63,788.30 |
| 6. | சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ரூ.10/- ஒரு பங்கிற்கு ) | 1,413.03 | 1,413.03 | 1,413.03 | 1,413.03 | 1,413.03 |
| 7. | ஒதுக்கீடுகள் (மறுமதிப்பீட்டு ஒதுக்கீடுகள் நீங்கலாக) முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிவிக்கையின் படி | - | - | - | 98,237.43 | 93,483.95 |
| 8. | ஒரு பங்கிற்கான வருவாய் (ரூ. 10/- ஒரு பங்கிற்கு) (தொடரும் அல்லது தொடரா நடவடிக்கைகளுக்கு) | | | | | |
| | அ) அடிப்படை பங்குகள் – ரூபாயில் | 12.93 | 9.13 | 11.99 | 44.47 | 452.72 |
| | ஆ) மதிப்பு குறைந்த பங்குகள் – ரூபாயில் | 12.93 | 9.13 | 11.99 | 44.47 | 452.72 |

குறிப்புகள் :

(1) மேலே கொடுக்கப்பட்டுள்ள செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015-ன் விதிமுறை 33-ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த நான்காம் காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான அறிக்கையின் சாராம்சமாகும்.

(2) மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த நான்காம் காலாண்டு மற்றும் ஆண்டிற்கான முழு நிதிநிலை முடிவுகள் BSE Limited இணையதளம் (www.bseindia.com), National Stock Exchange of India Limited இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.ttkhealthcare.com) உள்ளது.

(3) நிறுவனத்தின் தொடர்பான மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த நான்காம் காலாண்டு மற்றும் ஆண்டிற்கான இந்த நிதிநிலை முடிவுகள், நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திலும் மற்றும் காணொளி மூலமும் மே 23, 2024 அன்று நடைபெற்ற தணிக்கைக் குழுவின் கூட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்பட்டு, மே 24, 2024 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர்கள் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட முடிவுகளை தணிக்கை செய்து, மாற்றப்படாத கருத்தை வெளியிட்டுள்ளனர்.

(4) (அ) நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் லாபம் (முந்தைய ஆண்டு தொடர்பானது)

(i) தொழில் நிறுவன விற்பனையில் லாபம் :

2022-23 நிதி ஆண்டின் முதல் காலாண்டின் போது, நிறுவனத்தின் மனித மருந்துப் பிரிவை (தொழில் நிறுவனம்) தேவையான சம்பிரதாயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, மேலும் ஸ்லம்ப் விற்பனையின் அடிப்படையில் மற்றும் இயங்கும் நிறுவனமாக ரூ.80,500 லட்சம் (நடப்பு மூலதனம் மற்றும் பிற வழக்கமான சரியமைப்பிற்கு பிறகு உள்ள இறுதி மதிப்பீடான ரூ.80,281.54 லட்சம்) மே 09, 2022 முதல் M/s BSV Pharma Private Limited (BSV)-ற்கு, மாற்றப்பட்டது.

பரிமாற்றத்திற்கான தொகையை ரொக்கமாக 74% (ரூ.59,442.51 லட்சம்) மற்றும் வாங்கும் நிறுவனத்தின் பங்கு வடிவில் 26% ஆகும். BSV-ல் நிறுவனம் வைத்திருக்கும் மேற்கூறிய 26% பங்குகளை, M/s Bharat Serums and Vaccines Limited அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களால், தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளைப் பெற்ற பிறகு வெளியீட்டு விலையில் வாங்குவதற்கு உண்டான நிபந்தனை பரிமாற்ற விதிமுறையில் இடம்பெற்றுள்ளது.

2022-23 நிதி ஆண்டின் மூன்றாம் காலாண்டின் போது, மேற்கண்ட பங்குகள் M/s Bharat Serums and Vaccines Limited-ற்கு மாற்றப்பட்டு மற்றும் ரூ.20,839.03 லட்சங்கள் பங்குகளுக்காக நிறுவனத்தால் பெறப்பட்டுள்ளது.

இந்த தொழில் நிறுவன விற்பனையின் மூலம் கிடைத்த லாபமானது (உறுதியற்றபின் நிகழ்வுகளுக்கு ரூ.1,500 லட்சங்களை வழங்கிய பிறகு, மற்றும் அதிலிருந்து நிறுவனமானது மார்ச் 31, 2023 வரை ரூ.266.58 லட்சம் செலவு செய்திருக்கிறது) ரூ.76,429.45 லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

(ii) மனித மருந்துப் பிரிவு செயல்பாடுகளின் லாபம் :

மனித மருந்துப் பிரிவின் மாற்றப்பட்ட தேதி அதாவது மே 09, 2022 வரை, இதனின் மொத்த வருமானம் ரூ.2,240.57 லட்சமாக இருந்தது (ரூ.1,132.29 லட்சம் சேர்ந்த முந்தைய ஆண்டுகளின் தேவையில்லாத சேதமானம் / காலாவதியான திரும்ப பெறப்பட்ட பொருட்களுக்கான தள்ளுபடி ஒதுக்கீடு மற்றும் அதன் மொத்த செலவுகள் ரூ.1,026.10 லட்சம், இதன் விளைவாக கிடைத்த நிகர லாபம் ரூ.1,214.47 லட்சங்கள்.

(ஆ) நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் வரிச் செலவுகள் (முந்தைய ஆண்டு தொடர்பானது):

மனித மருந்துப் பிரிவின் விற்பனைக்கான வரிச் செலவு ரூ.17,835.48 லட்சம் [(அதாவது) நீண்ட கால மூலதன ஆதாய வரிச் செலவு மேலே உள்ள பரிமாற்றத் தொகையில் ரூ.17,769.26 லட்சங்களாகும் மற்றும் நிகர ஒத்திவைக்கப்பட்ட வரிக் கடன் ரூ.66.22 லட்சமாகும்].

மார்ச் 31, 2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மனித மருந்துப் பிரிவின் செயல்பாடுகளின் லாபத்தின் மீதான வரிச் செலவு ரூ. 303.94 லட்சமாகும்.

(5) வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் பிற தொடர்புடைய பகுதிகளுக்கான நிறுவனத்தின் பங்களிப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சமூகப் பாதுகாப்புக் குறியீடு 2020-ன் அமலாக்கம் ஏப்ரல் 01, 2021க்கு அப்பால் அரசாங்கத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நிறுவனம் அதன் ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் 2020-21 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் ரூ.350 லட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. விதிகளின் செயல்பாட்டிற்குப்பின் மேலும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க முன்மொழிகிறது.

(6) மார்ச் 31, 2024-ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான ஈவுத் தொகை ரூ.10/- மதிப்பீடான பங்கு ஒன்றிற்கு ரூ.10/- (100%) வழங்குவதற்கு, இயக்குநர் குழு பரிந்துரை செய்துள்ளது.

(7) மார்ச் 31, 2024 மற்றும் மார்ச் 31, 2023-ல் முடிவடைந்த காலாண்டிற்கான புள்ளி விவரங்கள், முழு நிதியாண்டுகளின் தணிக்கை செய்யப்பட்ட புள்ளி விவரங்களுக்கும், தொடர்புடைய நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரை வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களுக்கும் இடையிலான சமநிலை புள்ளி விவரங்களாகும். இவை மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகும்.

(8) முந்தைய காலங்கள் / ஆண்டின் புள்ளி விவரங்களானது தற்போதைய காலங்கள் / ஆண்டுக்கான வழங்கல்களுக்கு இசைவாக அவசியமான எல்லா இடங்களிலும் ஒருங்கிணைக்கபட்டு மற்றும் மறுவகைப்படுத்தப்பட்டது.

டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்டிற்காக
டி டி ரகுநாதன்
நிர்வாகத் தலைவர்

இடம் : சென்னை
தேதி : மே 24, 2024